# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக்கல்வித் தேர்வுகள் - மே 2024

---

### இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி சான்றிதழ், பட்டயம், இளநிலை, இளங்கல்வியியல், முதுநிலைஆகிய பாடங்களுக்கான மே 2024 தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி, 19.07.2024 முதல் 29.07.2024 வரை நடைபெறவுள்ளன.

1. அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் வெளியிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி தேர்வுகள் இணையவழியாக நடத்தப்பெறும்.
2. செய்முறைத் தேர்வுகள் தொடர்பான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.
3. மே 2024 தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்காதவர்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
4. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நாளன்று முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் பல்கலைக்கழக இணையதள முகவரியில் (www.tamiluniversity.ac.in) பாடவாரியாக வெளியிடப்படும். தேர்வு நேரம் முற்பகல் காலை 10 மணி முதல் 1 மணி வரை. பிற்பகல் 2 மணி முதல் 5மணி வரை.
5. தேர்வு இறுதி நாளன்று தாங்கள் எழுதிய அனைத்து விடைத்தாள்களையும் ஒரே உறையில் வைத்து விரைவுத் தபால் / கூரியர் தபால் மூலம் தொலைநிலைக்கல்வி தேர்வுப் பிரிவுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
6. மாற்றுத் திறனாளி (பார்வைக் குறைபாடுடைய) மாணவர்களுக்குத் தேர்வு நேரத்தில் கூடுதலாக 1 மணி நேரம் அனுமதிக்கப்படுகிறது.
7. ஏ4 அளவுள்ள கோடிடப்படாத தரமான வெள்ளைத் தாள்களைப் பயன்படுத்த வேண்டும். இரண்டு பக்கங்களிலும் எழுதலாம். விடைத்தாள்களைப் பக்க எண்களிட்டு பக்க வாரியாக அடுக்கி ஏ4 அளவுள்ள தரமான உறையில் மடிக்காமல் வைத்து அனுப்ப வேண்டும்.
8. அனுப்புநர் முகவரியில் தங்களின் பெயர், முகவரி, பதிவெண் மற்றும் பாடப்பிரிவு ஆகியவற்றை எழுதி, **கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ), தொலைநிலைக் கல்வி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

9. விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ் பகுதியில் மாணவர்கள் தங்கள் சேர்க்கை எண்ணை எழுதிக் கையொப்பம் இடவேண்டும்.
10. விடைத்தாளின் முகப்பு பகுதியைப் பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து முதல்நாளே பதிவிறக்கம் செய்து கொண்டு, தேவைக்கேற்ப நகலெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாள் எழுதும்போதும் முழுமையாகப் பூர்த்தி செய்து ஒவ்வொரு விடைத்தாளின் முகப்புப் பக்கமாக இணைக்க வேண்டும்.
11. ஒவ்வொரு தேர்வினையும் 40 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.
12. விடைத்தாளின் எந்த ஒரு பக்கத்திலும் பெயர் மற்றும் சிறப்புக் குறியீடுகளை எழுதக் கூடாது.
13. தேர்வு தொடர்பான ஐயங்களுக்கு 04362-227845 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
14. எத்தகைய முறைகேடுகளிலும் மாணவர்கள் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். முறைகேட்டில் ஈடுபட்டதாகத் தெரிய வந்தால் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

15/7/2024

கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ)